# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2023

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | நாடகமும் அரங்கியலும்<br>**(Drama & Theater )** | செய்முறை<br>**Practical** |
| | 45 T | |

**01.கணிப்பீட்டச் சந்தர்ப்பம். .1 செய்முறை**

கணிப்பீட்டு நேரம் : 40 நிமிடங்கள்

(அ) தாளக்கட்டு ஒன்றிற்கு அல்லது,பரீட்சகரால் வழங்கப்பெறும் இசைக்கு அல்லது ஒலிக்கு ஏற்ப வெளியில் விரும்பிய கோலங்களில் அசையுங்கள்

(ஆ) அசைவின் நிறைவில் பரீட்சகரால் தரப்படும் பின்வரும் உணர்வு நிலைகளில் ஏதாவது ஓர் உறை நிலைப் பாத்திரம் ஒன்றின் படிமத்தை உருவாக்குங்கள்

(i) கேலி

(ii) மகிழ்ச்சி

(iii) இரக்கம்

(இ) உறை நிலைப் படிமத்தில் இருந்து சூழமைவு ஒன்றினைச் சித்திரியுங்கள்

(ஈ) அச் சூழமைவில் பாத்திரமொன்றினை உரையாடல்களுடன் படைப்பாக்கம் செய்யுங்கள்

(உ) இச்செயற்பாடு தொடர்பாக பரீட்சகரால் வினவப்படும் **இரண்டு** வினாக்களுக்கு விடை அளியுங்கள்

**கணிப்பீட்டு நியதிகள்**

| | |
|---|---|
| 1.கற்பனையும் படைப்பாக்கமும் | 04 புள்ளிகள் |
| 2.வெளிப்படும் செய்தி/ உணர்ச்சி | 04 புள்ளிகள் |
| 3.உணர்ச்சி வேகமும் லயமும் | 04 புள்ளிகள் |
| 4.நுட்ப வெளிப்பாடு | 04 புள்ளிகள் |
| 5.வாய்வழிப் பதில்கள் | 04 புள்ளிகள் |
| | **20 புள்ளிகள்** |

**02. .கணிப்பீட்டுச் சந்தர்ப்பம். 2 செய்முறை**

கணிப்பீட்டு நேரம் : 30 நிமிடங்கள்

(அ) பரீட்சகரால் வழங்கப்பெறும் சிறுகதை/கவிதை/பாடல் ஒன்றை வாசியுங்கள்

(ஆ) வழங்கப்பெற்ற பகுதிக்குள் காணப்படும் நாடகச சூழமைவுகளை பட்டியற்படுத்துங்கள்

(இ) அவற்றுள் ஏதாவது ஒரு சூழமைவை தனியாகச் சித்திரியுங்கள்

(ஈ) பரீட்சகரால் வினாவப்படும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளியுங்கள்

**கணிப்பீட்டு நியதிகள்**

| | |
|---|---|
| 1.கதையையும் கருவையும் கண்டறிதல் | 04 புள்ளிகள் |
| 2.சூழமைவுகளை நாடகமாக்குதல் | 04 புள்ளிகள் |
| 3.கற்பனையும் படைப்பாக்கமும் | 04 புள்ளிகள் |
| 4.வெளிப்பாட்டு நுட்பங்கள் | 04 புள்ளிகள் |
| 5.வாய்வழிப்பதில்கள் | 04 புள்ளிகள் |
| | **20 புள்ளிகள்** |

**03.கணிப்பீட்டுச் சந்தர்ப்பம். 3 கேட்டல்**

கணிப்பீட்டு நேரம் : 40 நிமிடங்கள்

(அ) பின்வரும் பாடல்களில் ஒன்றை பாடிக்காட்டுக/ஆடிக்காட்டுக

(i) தொன்று திகழ்ந்திடு இன்று இலங்கிடு..

(ii) காவி உடுத்தெல்லவோ ஆதிசிவனாரும்

(iii). என்னடி உந்தன் கோப்பியில்…

(ஆ) திரையில் காண்பிக்கப்பெறும் கூத்து/ இசைநாடகம் தொடர்பாக வினாவப்படும் வினாக்களுக்கு விடையளியுங்கள்

(இ) நாடகங்களின் காட்சித்துண்டத்தினை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை அளியுங்கள்

**கணிப்பீட்டு நியதிகள்**

1. பாடும் /ஆடும் திறன் 04 புள்ளகளி
2. பாத்திர உணர்வுவெளிப்பாடு 04 புள்ளிகள்
3. வெளியைப்பயன்படுத்தல் 04 புள்ளிகள்
4. வாய்வழிப்பதில்கள் (ஆ) 04 புள்ளிகள்
5. வாய்வழிப்பதில்கள் (இ) 04 புள்ளிகள்

**20 புள்ளிகள்**

**04.கணிப்பீட்டச் சந்தர்ப்பம். 1 ஆக்கச்செயற்பாடு**

கணிப்பீட்டு நேரம் 40 நிமிடங்கள்

(அ) உங்களுக்குத் தரப்படும் மத்திரிகைச்செய்தி/சிறுவர் /சிறுவர் பகுதியை வாசித்து அதனுடன் தொடர்புபடுகின்ற பாத்திரமொன்றினைக் கற்பனை செய்து அதற்கேற்ப வேட உடை மாதிரி ஒன்றினை தயாரியுங்கள் .

**அல்லது**

கிடைக்கப்பெறும் பொருட்களைப் பயன்படுத்தி 'ஆரொடு நோகேன்' நாடகத்தில் வருகின்ற இரண்டாவது (ராஜ்குமார்) குடும்பத்தின் காட்சிக்கு 'காட்சி விதானிப்பு' செய்யுங்கள்

(ஆ) புதியதொருவீடு நாடகத்தில் இடம்பெறும் **மையுண்ட நெடுங்கண்ணாத்தை** அல்லது ஆரொடுநோகேன் நாடகத்தில் வருகின்ற ராஜ்குமார் பாத்திரத்திற்கு ஏற்றவாறு வேட உடை ஒப்பனை செய்து அப்பாத்திரத்தினை நடித்துக் காட்டுங்கள்

(இ) பாத்திரம் தொடர்பாக வினாவப்படும் வினாக்களுக்கு விடை அளியுங்கள்

**கணிப்பீட்டு நியதிகள்**

1. கற்பனையும் படைப்பாக்கமும் 04 புள்ளிகள்
2. வெளிப்படும் செய்தி /உணர்ச்சி 04 புள்ளிகள்
3. உணர்ச்சி வேகமும் லயமும் 04 பள்ளிகள்
4. நுட்ப வெளிப்பாடு 04 புள்ளிகள்
5. வாய்வழிப்பதில்கள் 04 புள்ளிகள்

**04 புள்ளிகள்**

**05.கணிப்பீட்டச் சந்தர்ப்பம். 5 ஆக்கம்**

கணிப்பீட்டு நேரம் :- 40 நிமிடங்கள்

(அ) ஆரொடு நோகேன், புதியதொரு வீடு,மற்றும் நவீன நாடகங்களில் உள்ள பின்வரும் பாடல்களில் ஏதாவது ஒன்றினை உரிய உணர்ச்சி வெளிப்பாட்டுடன் பாடுக

(i) அம்புலி மாமா அழகழ சொக்கா.

(ii) வெள்ளிச் சிணுங்கி அழ..

(iii) சின்ன சின்ன குருவிகள்

(ஆ) 'ஆரொடு நோகேன்' நாடக எழுத்துருவின் பகுதி ஒன்றினை வாசிப்பு அரங்க நிலையில் வாசியுங்கள்

(இ). புதியதொரு வீடு நாடகத்தில் வருகின்ற *கட்டுமரம் ஏலை ஏலோ* என்ற அம்பாப் பாடலை ஆற்றுகை செய்யுங்கள்

**கணிப்பீட்டு நியதிகள்**

| | |
|---|---|
| 1.பாடல்களைப் பாடுதல் | 04 புள்ளிகள் |
| 2.வாசிப்பு நுட்பங்களைப் பயன்படுத்தல் | 04 புள்ளிகள் |
| 3.உடல் குரல் அசைவு வெளிப்பாடு | 04 புள்ளிகள் |
| 4.பாத்திரப்பொருத்தம் | 04 புள்ளிகள் |
| 5.மோடிக்கேற்ற ஆற்றுகைத்திறன் | 04 புள்ளிகள் |
| | **20 புள்ளிகள்** |